பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 14 செவ்வாய்க்கிழமை 30.11.2021 கதிர் 25

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசியல் பரப்பில் 'லேட்டஸ்ட்' பேசு பொருள் மாவை சேனாதிராசாவின் அறிவிப்பு.

அவர் எதைக் குறிப்பிட்டார் என்பதில் குழப்பம் உண்டு. அவருக்கே அது தொடர்பில் தெளிவு இருக்குமா என்பது சந்தேகம்தான்.

தமிழ்த் தரப்புகளின் பக்கம்02 »

# மாதகலில் மக்கள் போராட்டத்தால் காணி அளவீடு நிறுத்தம்!

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – மாதகல் கிழக்குப் பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக தனியார் காணிகளை சுவீகரிப்பதற்கான அளவீட்டுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

மாதகல் கிழக்கு ஜே/150 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 3 பரப்பு காணி கடற்படையினரின் தேவைக்கு சுவீகரிப்புக்காக அளவீட்டுப் பணிகள் நேற்றுக் காலை நில அளவைத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படவிருந்தன.

இந்நிலையில், ☞ 2



## மேயர் மணிவண்ணனுடன் ஜேர்மன் தூதுவர் சந்திப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்மாநகரசபைக்கு நேற்று விஜயம் செய்த இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர், மாநகர சபையின் மேயர் விஸ்வலிங்கம் ☞ 2

# புதிய வைரஸால் கடும் விளைவுகள்

## காத்திருக்கின்றது பேராபத்து என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை



'ஒமிக்ரோன்' வைரஸ் சர்வதேச அளவில் பரவ வாய்ப்புள்ளது எனவும், இது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் நேற்று அறிவித்துள்ளது. ☞ 10

## 'ஒமிக்ரோன்' இலங்கைக்குள் நுழைவதற்கு வாய்ப்பு அதிகம்

### சுகாதாரப் பிரிவினர் அபாய எச்சரிக்கை



தென்னாபிரிக்காவில் புதிதாகக்கண்டறியப்பட்ட கொரோனா மாறுபாடான 'ஒமிக்ரோன்' ஒருபோதும் இலங்கைக்குள் நுழையாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை ☞ 10

## யாழில் கிறிஸ்தவ தேவாலயம் மீது தாக்குதல்!

### பொலிஸ் விசாரணையின்போது ஒருவர் கைது

யாழ்ப்பாணம், கோட்டைக்கு அண்மையில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் மீது நேற்று அதிகாலை 3.30 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் உள்ள குறித்த தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து அவ்விடத்துக்கு விரைந்த ☞ 2



## மகளுடன் சேட்டை விட்டவரின் காதை அறுத்தெடுத்த தந்தை!

(ந.லோகதயாளன்)

12 வயதுச் சிறுமியுடன் சேட்டை விட்ட அயலவரின் காதை சிறுமியின் தந்தை அறுத்ததோடு வெட்டிக் காயப்படுத்திய சம்பவம் கிளிநொச்சி, தருமபுரத்தில் நடந்துள்ளது.

இந்தத் தாக்குதலை ☞ 10

## 745 பேருக்கு கொரோனா

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 745 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து ☞ 2

## அரசில் இருந்து வெளியேறுவதற்கான எந்தத் தீர்மானமும் இதுவரை இல்லை

### சுதந்திரக் கட்சி கூறுகின்றது

அரசில் இருந்து விலகுவதற்கான எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அரசு தொடர்பில் சில விமர்சனங்கள் இருந்தாலும் தொடர்ந்தும் அரசுடன் இணைந்து செயற்பட எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசிலிருந்து விலக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான பிரசாரங்கள் ☞ 10



## மேலும் 23 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 23 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் ☞ 2

## சித்தர் தலைமையில் மாவை இணைவது பெரும் மகிழ்ச்சி

### இப்படிக் கூறுகின்றார் செல்வம் எம்.பி.



(ந.லோகதயாளன்)

சித்தார்த்தன் தலைமையில் எதிர்காலத்தில் மாவை சேனாதிராஜா இணைவது பெருமகிழ்ச்சி அளிக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியப் ☞ 10

## யாழில் பாணின் விலை 10 ரூபாவால் அதிகரிப்பு

### ஏனைய வெதுப்பாக உற்பத்திகளின் விலைகளில் மாற்றம் எதுவுமில்லை

(பு.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாணின் விலை 10 ரூபாவால் அதிகரித்து 85 ரூபா எனவும், ஏனைய வெதுப்பக உற்பத்தி பொருள்களின் விலைகளில் எவ்வித மாற்றமும் செய்வது இல்லை எனவும் ☞ 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒற்றுமை முயற்சி பற்றித்தான் மாவை பேசினார். ஆனால் அது தொடர்பில் அவர் வெளிப்படுத்த வந்த கருத்து யாது என்பதில்தான் குழப்பம். மக்களுக்கும், வாசகர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் மட்டும்தான் குழப்பம் என்பதில்லை. அவருக்கும் கூட தமது உரையின் அர்த்தம் தொடர்பில் குழப்பம் இருக்கும் என்றுதான் நான் நினைக்கிறேன்.

தமிழர் தரப்பை ஒற்றுமைப்படுத்தும் முயற்சிக்கு புளொட் தலைவர் சித்தார்த்தன் தலைமை வகிக்க வேண்டும் என்று மாவை கூறினாரா? அல்லது தமிழர் தரப்பை ஒற்றுமைப்படுத்தி, அந்த ஒன்றுபட்ட அமைப்புக்கு சித்தார்த்தனே தலைமை வகித்து வழி நடத்த வேண்டும் என்று மாவை கூறினாரா? – என்பதில்தான் குழப்பம்.

எது, எப்படி என்றாலும் தமிழர் தரப்பு இப்போது குழம்பி, பிளவுபட்டு நிற்கின்றது. அதை சித்தார்த்தன் ஒற்றுமைப்படுத்த வேண்டும் என்ற தமது உரையினூடாக மாவை என்ற கூற வருகின்றார்?

ஒன்று – அந்த முயற்சியில் தாமும், தமது கட்சியும் (தமிழரசும்) தோற்று விட்டாயிற்று என்று அவர் ஒப்புக் கொள்கின்றாரா? அப்படி அவர் ஒப்புக் கொள்வது போன்றுதான் அவரது உரை இருந்தது.

அடுத்தது – ரெலோவும் அதன் தலைவர் செல்வமும் எடுக்கும் தற்போதைய முயற்சியும் தமிழர் தரப்பை ஒற்றுமைப்படுத்தவேயில்லை என்பதை மாவை சூசகமாக ஏற்றுக் கொள்கின்றாரா? அதனால்தான் ரெலோவுக்கு அப்பால் புளொட் தலைவர் சித்தார்த்தன் புதிதாக ஒற்றுமை முயற்சியை ஆரம்பிக்க வேண்டும் என்று மாவை கூறுகின்றாரா?

மூன்றாவது – சம்பந்தன் தலைமையிலான தமிழ்க் கூட்டமைப்பு தமிழரை ஒற்றுமைப்படுத்தவில்லை, அந்த முயற்சியில் சம்பந்தனின் தலைமை பயன்தரும் விதத்தில் காரியமாற்றவில்லை என மாவை சேனாதிராசா கருதுகின்றார் போலும். அதனால்தான் சம்பந்தனுக்குப் புறம்பாக, சித்தார்த்தனை தமிழ்த் தரப்பை ஒற்றுமைப்படுத்தும் முயற்சியை ஆரம்பிக்கும்படி அவர் கோருகின்றார் என எண்ணத் தோன்றுகின்றது.

ஆனால், மாவை ஒரு விடயத்தை மறந்து விடக் கூடாது. அவருக்கு முன்னர் அவர் இருக்கும் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியை வகித்தவர் இரா. சம்பந்தன். அவர் இப்போது கூட்டமைப்பின் தலைவர்.

சரியாக ஒன்பதரை ஆண்டுகளுக்கு முன்னர் கடைசியாக தமிழரசுக் கட்சியின் தலைமை பதவியை மட்டக்களப்பில் நடந்த கட்சியின் தேசிய மாநாட்டில் வைத்து அவர் ஏற்ற போது அவர் கூறிய ஒரு விடயம் நோக்கற் பாலது.

"எவ்விதமாக ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் எமது கட்சிக்கு வரலாறு ஓர் அரசியல் பிறப்பைத் தந்ததோ, அதே விதமாகவே, பத்தாண்டுகளுக்கு முன்னர், எமது இனத்தின் விடுதலைப் போராட்டம் இருந்த அன்றைய காலச் சூழலுக்கு இசைவாக, வரலாறு எமது கட்சிக்கு ஒரு புதிய அரசியற் பாத்திரத்தையும் தந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற குடையின் கீழ் கொள்கை ரீதியாக ஒன்றிணைந்த தமிழ் அரசியல் கட்சிகளைத் தலைமையேற்று வழி நடத்தும் பாத்திரமே அது. அந்தத் தலைமைப் பாத்திரம் என்பது கூட, எமது கட்சியின் வரலாறு, பாரம்பரியம், தனித்துவம் என்பவற்றின் அடிப்படையில்தான் வந்தது. அந்தப் புதிய கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியே இன்று வரை விளங்கி வருகின்றது. அவ்வாறே அது என்றும் விளங்கி வரும்."

– அதாவது 2012 மேயில் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் தலைமையுரை நிகழ்த்திய சம்பந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கட்சி தமிழரசுதான் என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியிருந்தார்.

அந்தத் தலைமைப் பதவியைத் தாரை வார்ப்பதைப் பற்றித்தான் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா இப்போது பிதற்றுகின்றார்.

அவருடைய அந்தப் பேச்சை நேற்றுக் காலை வாசித்தறிந்த புலம்பெயர் சமூகத்தின் மூத்த பிரஜை ஒருவர் – பலத்த தமிழரசுக் கட்டை ஒருவர் – என்னிடம் ஒரு கேள்வி எழுப்பினார்.

"மாவையருக்கு என்ன வயது போய், பேச்சு, வாக்கு மாறி விட்டதா? இப்படிப் பேசுகின்றாரே...?" – என்று விசனப்பட்டார் அவர்.

கட்சித் தலைமையை இளம் இரத்தங்களிடம் ஒப்படைத்து விட்டு அரசியலில் ஓய்வுபெறும் உச்சத்துக்கு மாவையர் வந்து விட்டார் என்பதுதான் என் கணிப்பு.

அப்படி இல்லை, இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைமையை மட்டுமல்ல, உத்தேச வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளர் பதவியையும் பெறத் தகுதியானவன் நானே என மாவையர் தொடர்ந்து அடம் பிடிப்பார் என்றால் – அப்படி எண்ணிக் செயற்படுவார் என்றால் – தந்தை செல்வா சொன்னபடி கடவுள்தான் தமிழினத்தை மட்டமல்ல, தமிழரசையும் காப்பாற்ற வேண்டும்.

★ ★ ★

1996 இல் இலங்கை கிரிக்கெட் அணி உலகக் கிண்ணத்தைச் சுவீகரித்த போது அந்த அணிக்குத் தலைமை வகித்தவர் அர்ஜுன ரணதுங்க. ஐ.தே.கட்சி அரசில் அமைச்சராக இருந்தவர்.

"ஐ.தே.கட்சி செயலிழந்து விட்டது. இனியும் அதில் இருப்பது அர்த்தமற்றது." – என்று தெரிவித்து அந்தக் கட்சியிலிருந்து விலகியிருக்கின்றார் அவர்.

★ ★ ★

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் சில இடங்களிலும் பதுளை, நுவரெலியா, மாத்தளை மாவட்டங்களிலும் நேற்ற முன்னிரவு திடீர் மின்வெட்டு.

யுகதனவி மின் உற்பத்தி நிலையப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்குக் கைமாற்றியமையை ஆட்சேபித்துள்ள இலங்கை மின்சார சபை பொறியிலாளர் தொழிற்சங்கம், திடீர் மின்வெட்டு நடைமுறைக்கு வரும் என எச்சரித்திருந்தது. இந்தச் சூழலிலேயே இந்த மின்வெட்டு ஏற்பட்டது.

மின்வெட்டுக்கான உண்மையான காரணம் இன்று காலைதான் தெரியவரும் என்று கூறப்பட்டது.

– மின்னல் –

## யாழில் கிறிஸ்தவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸார் விசாரணை நடத்தியதோடு, குறித்த தாக்குதலை நடத்திய கொட்டடி பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் மது போதையில் இருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலின் பின்னணி தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மேயர் மணிவண்ண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மணிவண்ணனைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு ஆக்கபூர்வமாக நடைபெற்றது எனவும், தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையான சமஷ்டி அடிப் படையான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கும், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன அழிப்பு உட்பட்ட அநீதிகளுக்கு நீதியைப் பெற்று கொடுப்பதற்கும் ஜேர்மன் உள்ளிட்ட சர்வதேச சமூகம் உதவ வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததார் எனவும் மேயர் மணிவண்ணன் தெரிவித்தார்.

மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்ட மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையைத் தாண்டி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அல்லது சிறப்பு தீர்ப்பாயம் ஒன்றுக்கு விடயங்கள் பாரப்படுத்தப்பட வேண்டும் என்றும் இதன்போது தான் வலியுறுத்தியதாக மேயர் மணிவண்ணன் கூறினார்.

மேலும், போர் அழிவில் இருந்து மீண்டுவரும் எமது பிராந்திய அபிவிருத்திக்கும் ஜேர்மன் உதவ வேண்டும் என்றும், யாழ். மாநகர சபைக்கும் ஜேர்மனின் பிரதான நகரங்களுடன் இரட்டை நகர் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டு இணைந்து செயற்படுவதற்கும் உதவ வேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டது எனவும் மேயர்மணிவண்ணன்மேலும்குறிப்பிட்டார்.

## மேலும் 23 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டன என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மரணமடைந்த 23 பேரில், 16 பேர் ஆண்கள், 7 பேர் பெண்கள் என்பதுடன், 60 வயதுக்கு மேற்பட்டோர் 19 பேர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 328 ஆக உயர்வடைந்துள்ளது.

## மாதகலில் மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அளவீட்டுப் பணிகளைத் தடுத்து நிறுத்துவதற்காக குறித்த இடங்களில் ஒன்று கூடிய காணி உரிமையாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது அங்கு அமைதியின்மை நிலவியது. இவ்வேளையில் காணி அளவீட்டு நடவடிக்கைகளைத் தற்காலிகமாக கைவிட்டு நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அவ்விடத்தில் இருந்து விலகிச் சென்றனர்.

## யாழில் பாணின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட பேக்கரி உற்பத்தியாளர் சங்கம் மற்றும் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கங்களுடன் மாவட்ட அரச அதிபரின் தலைமையில், மேலதிக அரச அதிபர் (காணி) மற்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர் ஆகியோருடன் பாணின் உற்பத்தி மற்றும் விலை தொடர்பான கலந் துரையாடல் நேற்று திங்கட்கிழமை நடை பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கோதுமை மாவின் விலை அதிகரித்ததன் காரணத்தால் 450 கிராம் பாணின் விலை 10 ரூபாவால் அதிகரித்து 85 ரூபா எனவும், ஏனைய வெதுப்பக உற்பத்தி பொருள்களின் விலைகளில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## 745 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)ய 63 ஆயிரத்து 265 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 10 ஆயிரத்து 378 பேர் குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 40 ஆயிரத்து 40 ஆக உயர்வடைந்துள்ளது.




பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"கொரோனா எனும் கொடிய நோயுடன் நம் தேசம் போராடிக்கொண்டு இருக்கையில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் எனும் நோய்க்கான எதிர்ப்பு சக்தியையும் அதிகரிப்போம்."

16 2021

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

# பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வருமாறு முன்னாள் அரசியல் கைதியொருவருக்கு அழைப்பு

வவுனியாவில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதி ஒருவரை, பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வருமாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் நேற்று (திங்கட்கிழமை) அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதியான செல்வநாயகம் ஆனந்தவர்ணன் என்பவரையே, எதிர்வரும் 01.12.2021 ஆம் திகதி கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு வருகை தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அரசியல் கைதிக்கு அனுப்பப்பட்டுள்ள அழைப்பாணையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைக்கு அமைவாக வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக, எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் முதலாம் திகதி காலை 9.30 மணிக்கு பயங்கரவாத விசாரணை மற்றும் தடுப்பு பிரிவு கெப்பிட்டல் கட்டடம் நாரயன்பிட்ட முகவரியில், 3 ஆம் மாடிக்கு சமுகமளிக்குமாறு அழைக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கில் மேலும் 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை விடுவிக்க தீர்மானம்

கொழும்பு, நவ. 30

வடக்கில் மேலும் 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை விடுவிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக விவசாயத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் மேய்ச்சல் நிலத்துக்கான பற்றாக்குறை காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நேற்று சபையின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

இந்நிலைமை காரணமாக மாவட்டத்தில் பண்ணையாளர்களுக்கும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன எனவும் நாடாளுமன்றில் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, வடக்கில் மாத்திரமன்றி நாட்டின் பல பகுதிகளில் இந்தப் பிரச்சினை காணப்படுவதாகத் தெரிவித்தார்.

அத்துடன் வடக்கில் 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை விடுவிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பருத்தித்துறை நகரசபை வழங்குநர்களை பதிவு செய்தல் - 2022

பருத்தித்துறை நகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான கீழ்குறிப்பிடப்பட்ட வழங்கு பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள் உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், வியாபார நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொகுதி A – பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி B – சேவைகள் / வேலைகள்
தொகுதி C – வாகனத் திருத்தமும் சுத்திகரிப்பு சேவையும்
தொகுதி D – ஒப்பந்த வேலைகள்
தொகுதி E – உணவு வகைகள்

| தொகுதி "A" | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A -01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் ,உபகரணங்கள், மற்றும் அதனுடைய தொடர்புடைய பொருட்கள் |
| A -02 | தளபாடமும் அலுவலக உபகரணங்களும் (மரம்/இரும்பு/உருக்கு) |
| A -03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம் போட்டோகொப்பி இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A -04 | யன்னல் திரை சீலைகள் சீருடை மற்றும் துணி வகைகள் |
| A -05 | குளியலறை பொருத்திகள், மாபிள் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A -06 | கட்டிட இரும்புப்பொருட்கள் பெயின்ற் வாணிஸ் மற்றும் ஹாட் வெயர் பொருட்கள், சீமேந்து |
| A -07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள் மின்னிணைப்புக்கான பொருட்கள், மின்மோட்டர்கள், மின்சாரபல்புகள் மின் விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள், வீதிமின் விளக்குகள் |
| A -08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A -09 | அழுக்கு நீக்கும் பவுடர்,விம்,ஹாப்பிக் மற்றும் கிருமி நாசினிகள், கொரோணா தடுப்புப் பொருட்கள், மற்றும் ஏனையவை |
| A -10 | வாகன உதிரிப்பாகங்கள் துணைப்பொருட்கள் டயர்,ரியுப் மற்றும் ஏனையவை |
| A -11 | தோல் உற்பத்திப்பொருட்கள், சப்பாத்துக்கள் |
| A -12 | எரிபொருட்கள், உராய்வுநீக்கிகள், எஞ்சின் ஓயில் |
| A -13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A -14 | இரும்புப்பொருட்கள், வேலைத்தள உபகரணங்கள் |
| A -15 | கற்கள், மண் வகைகள், கூட்டெருபசளை,தார் |
| A -16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A -17 | பனைமரங்கள், சலாகைகள், கம்பஸ் மரம், ஏனைய பலகைகள் |
| A -18 | பாதணிகள், தோல்பொருட்கள், மழைக்கவசம், கையுறை |
| A -19 | அலங்காரப்பொருட்கள் |
| A -20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |
| A-21 | அலுமினியபிற்றிங்குடன் தொடர்புடைய பொருட்கள் |

| தொகுதி "B" | சேவைகள் /வேலைவிபரம் |
|---|---|
| B -01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும், தொழிநுட்ப ஆலோசனை வழங்கலும் |
| B -02 | உருக்குமரத் தளபாடங்கள் திருத்தம் |
| B -03 | மின் உபகரணங்கள் திருத்தம்,சேவிஸ் செய்தல்(காற்றுகுளிராக்கி,தொலைநகல்,நிழற்பிரதி இயந்திரம்,கணனி,கைவிரல் அடையாளப்பதிவு இயந்திரம்) |
| B -04 | மின்மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்தலும் மீளமுறுக்குதலும் |
| B -05 | பதிப்பகவேலை- சகலவிதபடிவங்களும் புத்தகங்கட்டுதலும் |
| B -06 | கட்டிடஅமைப்பும் திருத்தவேலைகளும் |
| B -07 | உள்ளகதொலைபேசி இணைப்பும் பராமரிப்பும் |
| B -08 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B -09 | கோலஉடைதைத்தல்,கோலஉடைவழங்கல் |
| B -10 | இறப்பர் முத்திரைவகைகளைதயாரித்துவழங்கல் |
| B -11 | சுத்திகரிப்புசேவையும் பாதுகாப்புசேவையும் |
| B -12 | வளிச்சீராக்கி இயந்திரம் கொள்வனவு,திருத்தம் |
| B - 13 | உலோகஒட்டுவேலைகள்,அலுமினிய,சில்வர்,கண்ணாடிபிற்றிங் வேலை |
| B - 14 | பனர், ஸ்ரிக்கர்,லமினேற்றிங்,போட்டோபிறேம் தொடர்பானவேலைகள் |

| தொகுதி "C" | திருத்தமும் சுத்திகரிப்புசேவையும் |
|---|---|
| C -01 | சகலவிதமான வாகன திருத்தமும், வாகனசுத்திகரிப்பும், உராய்வு நீக்கியும், எஞ்சின் ஓயில்,சீற் குசன் வேலை |
| C-02 | வாகனங்களுக்கானரியுப் ஒட்டுதலும் உலோகவேலையும் |
| C -03 | உழவுஇயந்திரபெட்டி, உழவு இயந்திரபெட்டிதிருத்தம், ஏனைய வாகனங்களுக்கானதிருத்தம் |
| C -04 | நீர் இறைக்கும் இயந்திரம்,,நீர் இறைக்கும் மோட்டர் திருத்தம் |
| C -05 | மோட்டர்சைக்கிள் திருத்தமும் சுத்திகரிப்பும் |

| தொகுதி "D" | ஒப்பந்தவேலைகள் |
|---|---|
| D -01 | கட்டிடநிர்மானமும் திருத்தமும் |
| D-02 | வீதிகள் நிர்மானமும் திருத்தமும் |
| D -03 | வர்ணம் பூசுதல் |

| தொகுதி "E" | உணவு வகைகள் |
|---|---|
| E -01 | சமைத்தஉணவு,சிற்றுண்டி வகைகள் |
| E-02 | குளிர்பான வகைகள் ,குடிநீர் போத்தல்கள் |

**நிபந்தனைகள் :**

1. வழங்கல்கள் சேவைகள் 2022 ஆம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியாகும்.
2. ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள தொடர் இலக்கம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்படவேண்டும்.
3. விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் எமது அலுவலகத்தில் ரூபா 500.00 (**VAT** நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4. விண்ணப்பப் படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்கு நர்களையும் சேவைகளையும் பதிவு செய்தல் - 2022"** எனகுறிப்பிட்டு **தவிசாளர், பருத்தித்தறை நகரசபை, பருத்தித்துறை** என்ற முகவரிக்கு **31.12.2021** இற்கு முன்னர் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும்.
5. திருப்திகரமற்ற வழங்கல் சேவைகளை நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழு தலைவருக்கே உண்டு.
6. பதிவிற்காக பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
7. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**யோ.இருதயராசா**
**30.11.2021**
**தவிசாளர்,**
**பருத்தித்துறை நகரசபை.**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மக்கள் நம்ப நடவுங்கள்!

முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் ஊடகவியலாளர் ஒருவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட விடயம் தமிழர் தரப்பில் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்படுவதோடு நிலைநாட்டப் பட்டிருக்கின்றமை வெளிப்படுத்தப்படவும் வேண்டும்.

ஆனால் இந்த விவகாரத்தையும் கையாளும் பொலிஸ் தரப்பு மக்களுக்கு, குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு , நம்பிக்கை தரும் விதத்தில் செயற்படவில்லை என்பதுதான் வேதனைக் குரிய விடயமாகும்.

இவ்விவகாரத்தில் பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதி செய்வதை விடுத்து, பொலிஸ் தரப்பு பௌத்த, சிங்களப் பேரினவாதச் சிந்தனையில் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றதோ என்ற சந்தேகம் தமிழர் பக்கத்தில் எழுந்துள்ளமையைச் சுட்டிக்காட்டி யேயாக வேண்டும்.

மாவீரர் தினம் என்பது தமிழர் பக்கத்தில் உணர்வுபூர்வமான விடயம். அதைத் தமிழ் மக்களை அனுஷ்டிக்க விடாமல், ஒருங்கு சேர்த்து நினைவேந்த விடாமல் , தடுப்பதற்கு பொலிஸார் பகீரதப் பிரயத்தன முயற்சிகளை எடுத்தனர்.

அதுவும் முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றத்தை ஒருவாறு வழிப்படுத்தி நினைவேந்தலுக்கு முழுத் தடையை ஏற்படுத்த முயன்றனர். ஆனால் அங்குள்ள நீதிமன்றம் அதற்கு மசிந்து கொடுக்கவில்லை. அமைதியாகத் தங்கள் உறவுகளை நினைவேந்தும், அதுவும் ஒருங்கு சேர்ந்து நினைவேந்தும் மக்களின் உரிமைகளுக்கு தடை விதிக்க முல்லைத்தீவு நீதி மன்றம் மறுத்து விட்டது. அப்படி ஒருங்கு சேர்த்து நினைவேந்தும் மக்களின் உரிமையை அது தெளிவாக அங்கீகரித்தும் நின்றது.

அந்த நினைவேந்தலுக்கு நீதிமன்றம் மூலம் தடைவிதிப்பதற்கு பொலிஸ் தரப்பு பல வழிகளிலும் முயன்றபோதும் நீதியை நிலைநிறுத்துவதில் உறுதியாக இருந்த முல்லைத்தீவு நீதி மன்றம் பொலிஸ் கோரிக்கையை தூக்கிக் கடாசி விட்டது.

இதுதான் முல்லைத்தீவு நீதிமன்றத்தின் பிரதானமான நிலைப்பாடு என்பது நீதிமன்ற உத்தரவுகள் மூலம் பொலிஸா ருக்குத் தெரியப்படுத்தப்பட்டும் இருந்தது.

இந்த சூழ்நிலையில் மாவீரர் தின விடயங்களை மிகக் கவனமாகப் பொறுப்பெடுத்து, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் முல்லைத்தீவு பொலிஸார் மிக சிரத்தையாகச் செயற்பட்டிருக்க வேண்டும்.

ஆபத்தான ஊடகப் பணியில் இருந்த சுயாதீன ஊடகவிய லாளரை, அதுவும் உணர்சி பூர்வமான மாவீரர் தின நிகழ்வுகள் பற்றிய செய்திகளைச் சோதிக்கச் சென்றிருந்த ஊடகவிய லாளரை கடமையில், அதுவும் சீருடையில் இருந்த, இராணு வத்தினர் தாக்குவது என்பது மிக மோசமான அபத்த நடவடிக்கை யாகும்.

இது வெறுமனே சுப்பனும் குப்பனும் மோதிக் கொண்ட விடயம் அல்ல. உணர்ச்சி பூர்வமாக விடயத்தில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த ஊடகவியலாளர் ஒருவரை சீருடை தரித்த படையினர் முள்ளுக்கம்பி சுற்றிய தடியினால் அடிப்பது என்பது மிகப் பாரதூரமான குற்றச்சாட்டாகும்.

சிறிய மோசடிச் சம்பவங்களில் ஈடுபட்ட ஒருவரை சாதாரண விசாரணையின் கீழ் பொலிஸ் பிணையில் விடுவிப்பது சாதாரணம்தான்.

ஆனால் கடமையில் இருந்த ஊடகவியலாளரைத் தாக்கிய சீருடை தரித்த படையினரை பொலிஸ் தன்னுடைய பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளது. மேற்படி நடவடிக்கை மூலம் பொலிஸ் தரப்பு பக்கச் சார்பாக செயற்படுகின்றது என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

பொலிஸார் தாமே பிணை வழங்குவதைத் தவிர்த்து அந்த சீருடையினரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தி யிருந்தால் பொலிஸ் தரப்பின் நடுநிலைமை மெய்ப்பட்டிருக்கும்.

### ஒமிக்ரோன் கொவிட் மாறுபாடு:

## பயணிகள் பாதிக்கப்பட்டனரா என்பதை கண்டறிய வழியில்லை!

### சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு



ஒமிக்ரோன் மாறுபாடு இருக்கும் நாடுகளில் இருந்து பயணம் செய்பவர்கள் மாறு பாட்டை எடுத்துச் செல்கிறார் களா என்பதை அடையாளம் காண வழி இல்லை என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள் ளார்.

நாட்டில் மேற்கொள்ளப் படும் மரபணு பகுப்பாய்வு மூலம் மட்டுமே இந்த வைர ஸைக் கண்டறிய முடியும் என்றும் மாதிரிகள் மூலம் வைரஸை கண்டறியும் வரை, நாடு முழுவதும் தொற்று பரவக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சுகாதார சேவைகள் பிரதிப் பணிப் பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித் தார். நாட்டில் உள்ள மக்கள் இந்த மாறுபாட்டைக் கொண்டு செல்கிறார்களா என்பதை அடையாளம் காண முயற்சிப் பதை விட, ஒமிக்ரோன் மாறுபாடு அடையாளம் காணப்பட்ட வெளிநாட்டு பயணிகள் நாட்டுக்குள் நுழைவதைக் குறைப்பது முக்கியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை தற் போதைய நிலையில் நாட்டை முடக்கும் எண்ணம் சுகாதார அமைச்சுக்கோ அரசாங்கத் துக்கோ இல்லை என்றும் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

## பல ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை மன்னாரில் முழுமையாக பாதிப்பு



மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக 2021ஆம் 2022 ஆம் ஆண்டுக்கான பெரும்போக பயிர்ச்செய் கையில் சுமார் 17 ஆயிரத்து 167 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை முழுமையாக அழி வடைந்துள்ளதாக மன்னார் மாவட்ட கமநல திணைக் களத்தின் உதவி ஆணை யாளர் ஏ.மெரின் குமார் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் 5 ஆயிரத்து 555 ஏக்கர், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 400 ஏக்கர், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 345 ஏக்கர் , மடு பிரதேச செயலாளர் பிரிவில் 825 ஏக்கர் மற்றும் மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 42 ஏக்கர் நெற் செய்கை முழுமையாக பாதிக்கப்பட் டுள்ளது.

மாவட்டத்தில் தற்போது வரை 17 ஆயிரத்து 167 ஏக்கர் வயல் நிலங்கள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

## அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



வவுனியா மாவட்ட செயல கத்துக்கு முன்னால் அபிவி ருத்தி உத்தியோகத்தர்களால் நேற்று (திங்கட்கிழமை) ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெ டுக்கப்பட்டது.

இலங்கை ரீதியாக அபிவிருத்தி உத்தியோகத் தர்கள் சங்கத்தால் முன்னெ டுக் கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் அரச உத்தியோகத்தர்களால் நாட்டுக்கு சுமை என்ற கருத் தை அரசாங்கம் விலக் கிக் கொள்ள வேண்டும், அரச உத்தியோகத்தர்களின் அடிப் படை சம்பளத்தை பத்தாயி ரத்தால் உயர்த்த வேண்டும், அரச ஊழியர்களின் வய தெல்லையை 65 வயதாக உயர்த்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அரச ஊழியர் களின் கருத்து சுதந்திரத்தை மறுக்காதே ஆகிய நான்கு விடயங்களை முன்வைத்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக் கப்பட்டது.

வவுனியா மாவட்ட செயல கத்துக்கு முன்பாக மதியம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களே கலந்து கொண்டிருந்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# புலிகளை தடை செய்வது சட்டத்துக்கு முரண் என்ற விவாதங்களை ஐரோப்பிய நீதிமன்றம் நிராகரித்தது

விடுதலைப் புலிகளை தடைசெய்யும் பட்டியலில் தொடர்ந்து வைத்திருப்பது சட்டத்துக்கு முரணானது, வங்கி பண முடக்கம் நியாயமற்றது, விடுதலைப் புலிகள் பயங்கரவாத இயக்கம் அல்ல. குறிப்பாக 2009 இல் யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்ட பின் அவர்களது போராட்டம் அஹிம்சை வழியிலானது. போன்ற காரணங்களை முன்வைத்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எதிராக தவராஜ் என்பவரால், விடுதலைப் புலிகள் சார்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த ஐரோப்பிய நீதிமன்றம் அவரது வழக்கின் அனைத்து வாதங்களையும் நிராகரித்துள்ளதோடு, வழக்குக்கான அனைத்துச் செலவுகளையும் அவர் பொறுப்பேற்க வேண்டும் எனவும் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

அந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு நகல் இவ்வாறு கூறுகிறது.

ஐரோப்பிய ஒன்றியச் சட்டத்தின் படி, 20011931 பொதுநிலையின் முதலாவது சரத்தின் படி 'பயங்கரவாதச் செயல்' என்பது தேசிய சட்டங்களுக்கமைய நாட்டையோ அல்லது சர்வதேச நிறுவனத்தையோ பாதிக்கும் குற்றமாக வரையறுக்கப்பட்ட கீழ்வருவனவற்றைக் குறிக்கின்றது.

(i) மக்களை கடுமையாக அச்சுறுத்துவது, அல்லது

(ii) எந்தவொரு செயலையும் செய்யுமாறோ அல்லது செய்யாமல் இருக்குமாறோ அரசாங்கம் அல்லது சர்வதேச நிறுவனத்தை முறையற்ற முறையில் கட்டாயப்படுத்துதல், அல்லது

(iii) ஒரு நாட்டின் அல்லது ஒரு சர்வதேச அமைப்பின் அடிப்படை அரசியல், அரசமைப்பு, பொருளாதார அல்லது சமூகக் கட்டமைப்புகளை மோசமாக சீர்குலைத்தல் அல்லது அழித்தல்:

* மரணம் சம்பவிக்கக்கூடிய வகையிலான தாக்குதல்கள்;

* உடலியல் ரீதியிலான தாக்குதல்கள்;

* கடத்துதல் அல்லது பணயக்கைதியாக வைத்துக்கொள்ளல்.

* ஓர் அரசு அல்லது பொது வசதி, போக்குவரத்து அமைப்பு, தகவல் கட்டமைப்பு அடங்கலான உட்கட்டமைப்பு வசதி, ஒரு தகவல் அமைப்பு, நிலையான தளம், பொது இடம் அல்லது தனியார் சொத்து, மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் அல்லது விளைவிக்கக் கூடிய அல்லது பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்தக் கூடியவை

* விமானம், கப்பல்கள் அல்லது பொது அல்லது சரக்கு போக்குவரத்துக்கான பிற வழிகளை பறிமுதல் செய்தல்;

* ஆயுதங்கள், வெடிமருந்துகள் அல்லது அணு, உயிரியல் அல்லது இரசாயன ஆயுதங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்தல், வைத்திருத்தல், கொள்வனவு செய்தல், விநியோகித்தல், அவை தொடர்பில் ஆய்வுசெய்தல் அல்லது அவற்றை மேம்படுத்தல்.

* மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் அபாயகரமான பொருள்களை வெளியிடுதல் அல்லது தீ, வெடிப்புகள் அல்லது வெள்ளங்களை ஏற்படுத்துதல்;

* நீர், மின்சாரம் அல்லது பிற அடிப்படை இயற்கை வளங்களின் விநியோகத்தில் குறுக்கிடுதல் அல்லது சீர்குலைத்து மனித உயிருக்கு ஆபத்தை விளைவித்தல். முதல் வரை பட்டியலிடப்பட்டுள்ள செயல்களில் ஏதேனும் ஒன்றைச் செய்யப்போவதாக அச்சுறுத்தல்.

* ஒரு பயங்கரவாதக் குழுவை வழிநடத்துதல்.

* ஒரு பயங்கரவாதக் குழுவின் நடவடிக்கைகளில் பங்கேற்பது, குழுவின் குற்றச் செயல்களுக்கு பங்களிக்கும் என்ற உண்மையை அறிந்தும் தகவல் அல்லது பொருள் வளங்களை வழங்குதல் அல்லது அதன் நடவடிக்கைகளுக்கு நிதியளித்தல்.

பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவால் அடையாளம் காணப்பட்ட நபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கப்படலாம். பயங்கரவாதப் பட்டியலில் உள்ள நபர்கள் மற்றும் அமைப்புகள் தொடர்பாகத் தொடர்ச்சியான கால இடைவெளியில், அதாவது குறைந்தது 6 மாதங்களிற்கு ஒருதடவை, மதிப்பாய்வு செய்யப்பட்டு அவர்கள் அந்தப் பட்டியலில் தொடர்ந்து வைக்கப்படுவது தொடர்பில் உறுதிசெய்யப்படும்.

இதில், விண்ணப்பதாரர்கள் ஐரோப்பிய அரசியல் உட்பிரிவு என்று கூறிக் கொள்ளும் தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

2019.01.08 அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைப் பயங்கரவாதப் பட்டியலில் தொடரும் முடிவை கவுன்ஸில் எடுத்ததுடன் அதற்கான காரணங்களையும் விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகருக்கு அனுப்பியது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவையாவன–

–விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர்களுக்குத் தனிநாடு கோரிப் போராடிய ஒரு குழுவாகும்.

– பிரித்தானியாவின் பயங்கரவாதம் தொடர்பான சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பயங்கரவாத நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்கொள்வதாகக் கூறி அதனைப் பயங்கரவாத அமைப்பாக பிரித்தானியாவின் உள்துறைத் திணைக்களம் 2001 இல் முடிவுசெய்தது.

– பிரான்ஸ் பாரிஸிலுள்ள பிராந்திய நீதிமன்றம் பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு மற்றும் அதிலுள்ள உறுப்பினர்கள் சிலர் அச்சுறுத்தி, மிரட்டி, வன்முறையைப் பயன்படுத்தி கையெழுத்து, வாக்குறுதி, பணம் மற்றும் சொத்துகளை பெற்றுக்கொள்வதன் மூலம் பயங்கரவாதச் செயல்களுக்கு நிதியளிக்கும் குற்றச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என 2009–11– 23 அன்று தீர்ப்பளித்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவரீதியில் தோற்கடிக்கப்பட்டாலும் அதனது சர்வதேச நிதிசேகரிக்கும் செயற்பாடுகளும் மீளக்கட்டமைக்கும் அதனது ஆற்றல்களும் அப்படியே இருக்கின்றன எனக் கூறி விடுதலைப் புலிகள் அமைப்பை நிதிமுடக்கப் பட்டியலில் இருந்து நீக்குவதற்கு ஏதுக்கள் இல்லை என முடிவுசெய்தது.

– விடுதலைப் புலிகள் அமைப்பு அதனது இராணுவ வல்லமையையும் வலையமைப்பையும் எதிர்காலத்தில் பயங்கரவாதத் தாக்குதல்களை மேற்கொள்ளத்தக்க விதத்தில் தக்கவைத்துக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டு உள்துறைச் செயலகமானது விடுதலைப் புலிகளைத் தடைப்பட்டியலில் தொடர்ந்து வைத்திருப்பதென 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிவுசெய்தது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை நிதி முடக்கல் பட்டியலில் தொடரப்போவதாக 2019–06– 27 அன்று கவுன்ஸிலானது கடிதம் மூலம் தெரிவித்தது. 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வெடிபொருள்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் கொடிகள் என்பவற்றை எடுத்துச் சென்ற நபர்களை ஸ்ரீலங்கா பொலிஸார் கைதுசெய்தமையைத் தொடர்ந்து தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் மேன்முறையீட்டுக் கமிஷனில் முறையிடப்பட்டது. இதை அடிப்படையாகக்கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை நீட்டிக்கப்பட்டது.

இந்தநிலையில், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்த செல்வரட்ணம் தவராஜ் என்பவர் விடுதலைப் புலிகள் சார்பாக ஆஜராகுவதற்கு அந்த அமைப்பால் அதிகாரமளிக்கப்பட்டவர் என்பதற்கும் விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய அரசியல் உபபிரிவினால் அந்த அமைப்பு சார்பாக ஆஜராக அதிகாரமளிக்கப்பட்டவர் என்பதற்கும் எந்தவொரு சான்றுமில்லை எனவும் எதிர்த்தரப்பு வாதம் முன்வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து நிதிமுடக்கப் பட்டியலில் சேர்த்தமைக்கான அடிப்படைகள் காலாவதியாகிவிட்டன என்று தொடர்ந்த வாதத்தை நிராகரித்த நீதிமன்றமானது தவராஜ் வழக்குத் தொடுத்த அடிப்படை விவாதங்கள் அனைத்தையும் நிராகரித்ததோடு, வழக்கிற்கான அனைத்துச் செலவுகளையும் அவரே பொறுப்பேற்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளது.



# கண்டி – பன்வில கலகிரிய தோட்டத்தில் தனி வீடுகளை அமைக்க அடிக்கல் நாட்டு

புதிய வாழ்வு எனும் திட்டத்தின் கீழ் கண்டி–பன்வில கலகிரிய தோட்ட மக்களுக்கு, 20 தனி வீடுளை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும் பிராஜா சக்தி நிறுவனத்தின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி தலைமையில் இடம்பெற்றுள்ளது.

கண்டி–பன்வில கலகிரிய தோட்ட மக்களுக்கு, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பணிப்புக்கு அமைய தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் 2 கோடி 60 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த வீடமைப்புத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தொழிற்சங்க பணிப்பாளர், தோட்ட அதிகாரி, பிரதேச சபை உறுப்பினர்கள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், பிரஜாசக்தி செயற்திட்டத்தின் அதிகாரிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# 'ஒரேநாடு–ஒரேசட்டம்' செயலணிக்கு எதிராக வலி.தென்மேற்கு பிரதேச சபையில் கண்டனம்

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரே நாடு–ஒரே சட்டம் செயலணி தொடர்பிலும் அதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஞானசார தேரரின் நியமனம் பற்றியும் வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் 44ஆவது சபை அமர்வின் போது கண்டனத் தீர்மானமொன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. பிரதேச சபை உறுப்பினர் கந்தையா ஜெசிதனால் கொண்டுவரப்பட்ட இந்தக் கண்டன பிரேரணை ஏகமனதான பிரதேசசபை உறுப்பினர்களின் வழிமொழிதலுடன் கண்டன தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் சிங்கள மக்களின் தனிப்பெரும்பான்மையோடு ஆட்சிப் பீடமேறிய அந்த சிங்கள மக்களிடமும் வீழ்ந்து வரும் தனது செல்வாக்கை தூக்கி நிமிர்த்தவே, இனவாத பிக்குவின் தலைமையில் மக்களின் கவனங்களை வாழ்வியல் சமூக பொருளாதார பிரச்சினைகளிலிருந்து திசைதிருப்பிவிடவே இந்த செயலணியை அரசாங்கமும் ஜனாதிபதியும் பயன்படுத்துகின்றனர் என தமது காரசாரமான கருத்துக்களை சபையின் உறுப்பினர்களான அ.ஜோன் ஜிப்பிரிக்கோ, லோ.ரமணன், சி.அனுசன் ஆகியோர் முன்வைத்தனர்.

இதேவேளை இந்த அரசினது இவ்வாறான ஜனநாயக விரோதப் போக்குகளைச் சுட்டிக்காட்ட முனையாத அரசிலுள்ள தமிழ் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு கண்டனமும் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பண்டையகாலம் முதல் கண்டியசட்டம், கரையோரச்சட்டம், தேசவழமைச் சட்டம் என இந்நாட்டில் நிலவி வந்த சட்டங்களை ஒழித்து, குழப்பநிலையை உருவாக்க நினைப்பது ஏற்கமுடியாதது என பிரேரணையை முன்மொழிந்த உறுப்பினர் ஜெசிதன் தனது உரையில் தெரிவித்துள்ளார். இந்தக் கண்டன பிரேரணை நிறைவேற்றப்பட்டபோது ஈ.பி.டி.பியினை பிரதிநிதித்துவப் படுத்தும் பிரதேச சபை உறுப்பினர்கள் சபையை விட்டு வெளியே சென்று தீர்மானம் நிறைவேறிய பின்னரே மீண்டும் சபைக்குள் பிரசன்னமானார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 207

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**533. இனப்படுகொலைக்கு ஆதரவாக வழக்குகள் சர்வதேச நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளனவே?**

இவை வழக்குகளாக ஏற்கப்படவில்லை. சமர்ப்பணங்கள் அந்த நீதிமன்றத்தில் பதியப்பட்டுள்ளன. அவை ஏற்றுக்கொள் எப்பட்டு, வழக்காக விசாரிக்கப்பட்டால் அது வரவேற்கத் தக்கதே. ஏனெனில் நடந்த சில அட்டூழியங்கள் ஆராயப்படும்.

ஆனால் இவை இனப்படுகொலை பற்றிய ஆராய்வுக்காகவோ, வழக்குக்காகவோ பதியப்படாமல் தமிழ் மக்கள் நாட்டை விட்டு நிர்ப்பந்தங்களால் வெளி



சர்வதேச நீதிமன்றம்

யேறுகின்றார்கள், அந்த நிர்ப்பந்தங்கள் எப்படி உருவாகின்றன, அதனால் தங்களது நாடு திரும்பும் உரிமை பாதிக்கப்படுகின்றது, திரும்புவதற்கு ஏதுவான காரணிகள் ஆக்கப்படவேண்டுமென்றே அவை கோருகின்றன. இனப்படுகொலை என்ற தீர்ப்புக்கான சமர்ப்பணங்கள் அல்ல அவை.

அவர்களின் சட்டத்தரணிகளால் அவை தொடர்ந்து முன்னெடுக்கப்படலாம்.

ஆனால் இன்றும் தமிழ் மக்களிடையே, புத்திசாதுரியமற்ற, சுயநல அரசியல் போக்குகளால் அரசியல் தலைமை போராட்டங்களுக்காக இதுவரை சர்வதேச மனித உரிமை மன்றுக்கு போதுமான சாட்சியங்கள் கொடுக்கப்படவில்லை. மேலும் மேலும் சாட்சியங்களும், ஆதாரங்களும் கொடுக்கப்பட்டால், அதுவும் தம் மூலம் கொடுக்கப்பட்டால் இனப்படுகொலை என்ற தீர்வு மிக விரைவில் கிடைத்து விடும் என்ற பரப்புரைகள் நடத்தப்படுகின்றன.

நடத்தப்படும் அட்டூழியங்கள் – உதாரணத்துக்கு மாவீர தின நிகழ்வுக்கு அனுமதி தராமை, நடத்தப்பட்டவைக்குத் தரப்பட்ட அவமரியாதைகள் என்பன மன்றில் ஆதாரப்படுத்தப்பட வேண்டும். ஆனால் இதுவரை வைக்கப்பட்ட சாட்சியங்கள் ஸ்ரீலங்காவின் போக்குகள் தொடர்பில் அவற்றை வலுப்படுத்தவில்லை. ஆகவே பாதிக்கப்பட்டவர்களின் மேலும் மேலும் பதிவுகள் அவற்றுக்காக மேற்கொள்ள வேண்டும் என்றும், இவை ஆதாரப்படுத்தப்பட்டுவிட்டால் இனப்படுகொலை நிரூபிக்கப்பட்டு விடும் என்பது போன்ற பிதற்றல்கள் தமிழ் மக்களது முயற்சிகளை வீணடித்து கொண்டிருக்கின்றன. தமிழ் மக்கள் முன்னாலிருப்பது சர்வதேசத்தைக் கையாளும் உத்திகளே.

**534. அப்படி சர்வதேசத்தை கையாளும் உத்திகள் எவையாகவேணும்?**

முதலாவது – ஒற்றுமையான அல்லது ஒத்த நிலைப்பாடுள்ள அரசியல் தீர்மானம். இரண்டாவது – இவைகள் முன்னெடுக்கக் கூடிய அனுபமுள்ள ஆளுமையான சர்வதேச கட்டமைப்புக்கள் வேண்டும். இப்பொழுது இருக்கும் நிலைகளைப் பார்த்தால் தமிழ் மக்கள் சுக்கான் இல்லாத படகு போல் காற்றடிக்கும் திசை எல்லாம் இழுக்கப்படுகின்றார்கள். தடியெடுத்தவன் தண்டல்காரன் மாதிரி எலரோவெல்லாம் அவர்களுக்காக அல்லது அவர்களில் அரசியல் செய்கிறார்கள். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களோ, அரை வயிற்று உணவுக்காக உலாவிக் கொண்டிருக்கின்றனர். வளைக்குள் செல்ல முயற்சிக்கும் எலி விளக்குமாறையும் கொண்டு போக எத்தனிக்கும் உவமானத்தை பற்றி நண்பரொருவர் பேசினார். கஷ்டமானாலும் முயற்சிகள் செய்ய வேண்டும். அந்த முயற்சிகள் கைகூடும். அதற்காக அவற்றை எறிந்து செல்லக்கூடாது என்பது அவரின் பேச்சின் சாரம்.

அனுபவங்களின் மூலமாகத்தான் அப்படியான வழக்கு மொழிகள் எழுகின்றன என்பதை நினைவூட்டினேன். பாண்டவர்கள், கௌரவர்கள் இரு பகுதியினருக்குமே துரோணாச்சாரியார் வில்வித்தையில் மரத்திலிருந்து மாங்காயைப் பறிக்க கர்மவீரன் – வினைத்திறன் கொண்டவன் – மாங்காயை மரத்தோடு இணைத்திருக்கும் நெட்டுக்குத்தான் குறி வைப்பான் என உபதேசித்தார்.

பிள்ளையார் பெருமான் மணமுடிக்காமல் இன்றுவரை குளத்தங்கரை, ஆற்றங்கரைகளில் அமர்ந்திருக்கிறார். தனது தாயார் பார்வதிதேவி மாதிரி மனைவி கிடைக்க வேண்டும் என்று உடும்புப் பிடியில் இருந்து மாறாதமையால் இப்படியானது என்பது இந்துக்களின் ஐதீகம்.

இனப்படுகொலை என ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையிலிருந்துதான் தமிழ் மக்களுக்குத் தீர்வுப் பொதி ஒன்று கிடைக்க வேண்டும் என அவர்கள் விட்டுக் கொடுக்காமல் நிற்கலாம். விநாயகர் போல் தமிழ் மக்களும் மணமுடிக்காமல், தீர்வு கிடைக்காமல் இருக்கலாம். அதற்காக நாம் விநாயகரை காரியசித்திக்காக வழிபடாமல் விடுவதில்லை. நம்பிக்கை வைக்கிறோம்.

''பழத்தை சாப்பிட்டால் (ஆப்பிள்) மரணம் நேரிடும்'' என்றபோது மனிதன் நம்பவில்லை.

"ஜலப்பிரளயம் வரப்போகிறது, பேழைக்குள் வந்துவிடுங்கள்'' என்று நோவா கதறியபோது மனிதன் நம்பவில்லை.

"தலைப்பிள்ளை சங்காரம் வருகிறது, என் ஜனங்களை விட்டுவிடு'' என்று மோசாஸ் கெஞ்சியபோது பார்வோன் நம்பவில்லை.

"அவர் மீண்டும் வருவார்'' என்றபோதும் ஜனங்கள் இன்னும் அவரை நம்பவில்லை.

ஆனால் அவரது வார்த்தைகளை அப்படியே நம்பும் ஒரு கூட்டம் உண்டு. அவர்கள் நம்பிக்கை நிச்சயம் தோற்கவில்லை, இனித் தோற்பதும் இல்லை, என் ஆண்டவர் நிச்சயம் மகிமையோடே திரும்பி வருவார், பூமியிலுள்ள யாவருடைய கண்களும் நிச்சயம் அவரைக் காணும். அவருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்துங்கள்'' – என சுவிசேச செய்தியை இயேசு பெருமான் சிலுவையில் அறைந்த நாள்தொட்டு அவருடைய போதகர்கள் மூலம் கேட்கிறோம். நம்பிக்கை தான் வாழ்க்கை. நம்பியே வாழ்வதும் வாழ்க்கைதான். அந்த நம்பிக்கையிலும் எங்களில் பலர் வாழ்கிறார்கள். ஆனாலும் பௌத்தத்திற்கு முதலிடமாக நாடு முழுவதும் அதனது ஏகாதிபத்தியம் நிறுவப்பட வேண்டும் என மும்முரமாக உழைப்பவர்கள் தூங்காமல் விழித்திருந்து தமிழ் மக்களை அப்புறப்படுத்துவதிலேயே குறியாயிருக்கிறார்கள். அதனைத் தடுக்கும் உத்திகள் தான் உடனடித் தேவை. அந்த நம்பிக்கைகள் பிரார்த்தனைகளாகத்தான் இருக்கும்.



சர்வதேச குற்றவியல் நீதிமன்ற அமர்வு

**535. தமிழ் மக்கள் ஒற்றுமையான அல்லது ஒத்த நிலைப்பாடுள்ள அரசியல் தீர்மானத்தை எப்படி அடைவது?**

துரதிஷ்டவசமாக அவர்களுக்கு தலைமைகளை மாற்றி விட்டால் அப்படியான தீர்வுகள் வந்து விடும் என்ற சித்தாத்தங்கள் புகுத்தப்படுகின்றன. சம்பந்தனுக்குப் பிறகு யாருக்கு தலைமை பதவி என்று பலகாலமாக பேசுகிறோம், எழுதுகிறோம். ஒரு பக்க ஆதரவுகளில் மாவை முதலமைச்சர் பதவிக்கு வரப் பாடுபடுகிறார். அப்படி வந்து விட்டால் அரசியல் நிலைப்பாடுகள் சரியாகிவிடும் என்பது இன்னுமொரு வியூகம். சுமந்திரனுக்கு தலைமைப் பகுதிக்கு அருகதையுள்ளது என அமெரிக்க விஜயங்களிடையே சாணக்கியன் அறிவிக்கிறார். அதைத் தொடர்ந்தோ அறிந்தோ மாவை சேனாதிராசா, சித்தார்த்தன் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும் என அறிவிக்கிறார். அதே சமயம் நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையில் ஒற்றுமைக்கான ஈடுபாடுகள் நடைபெறுகின்றன.





இவைதானா தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அத்தியாவசிய பிரச்சினைகள்? சர்வதேசத்தை அணுக இந்த தலைவர் யார் என்பதுதானா முக்கியம் என்பதே பலரின் அங்கலாய்ப்பு.

1951 ஆம் ஆண்டு சுயநிர்ணய அடிப்படையில் தீர்வு வேண்டும் என்று தமிழ் மக்கள் வேண்டிநின்றனர். இந்த இடைக்காலங்களில் அந்த சுயநிர்ணய உரிமையின் மூலம் அவர்கள் எப்படியான தீர்வை நோக்கிச் செல்ல வேண்டும் என்பது சமஷ்டி தொடக்கம் சுதந்திர தமிழ் ஈழம் வரை பரிணாமம் பெற்றது.

(07ஆம் பக்கம் பார்க்க)

# ‘சிவாகம கலாநிதி’ விருது இரு சிவாச்சாரியார்களுக்கு!







விப்ரசிரேஷ்டர்களான மஹாராஜஸ்ரீ நகுலேஸ்வர குருக்களும் இணுவில் காயத்ரிபீடம், தர்மசாஸ்தா குருகுல அதிபர் வேதசிவாகம பாஸ்கர ’சிவஸ்ரீ தானுநாத மஹாதேவ குருக்களும் இந்தியா தருமபுரம் ஆதீனத்தின் சார்பில் ஆதீனத்தின் 27 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், எமது இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் எமது விண்ணப்பத்தை ஏற்று ‘சிவாகம கலாநிதி’ எனும் சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவம் செய்வது சைவமக்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த மகிழ்ச்சியை தந்துள்ளது.

இந்தியாவின் தொன்மையான சைவத் திருமடங்களுள் ஒன்றாகவும், சைவமும் தமிழும் இனிதே தழைத்தோங்குக என்ற கோட்பாட்டுடன் சமய வளர்ச்சியிலும், தமிழ் வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றி வரும் ஆதீனமாகவும் விளங்குகிறது தருமபுரம் ஆதீனம்.

இந்த ஆதீனத்தின் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் டிசெம்பர் 3 ஆம் திகதி முத்தியடைந்தமையையடுத்து, ஆதீனத்தின் இளைய சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகள், தருமையாதீனத்தின் 27 ஆவது குருமகா சந்நிதானமாக வெள்ளிக்கிழமை ஞானபீடம் ஏற்றார்.

தருமபுர ஆதீன பரம்பரையைத் ‘திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்’ எனப் போற்றுகின்றனர். இதன் பரம்பரையில் வரும் முதல் நால்வரை அகச் சந்தான குரவர் என்றும் கயிலாயவாசிகள் என்றும் கூறுவர். இந்தப் பரம்பரை அகச் சந்தான குரவர், புறச் சந்தானக் குரவர் மற்றும் சந்தானக் குரவர் என வரிசைப்படுத்தப்படுகிறது.

### சிவஸ்ரீ தானுநாத மஹாதேவ குருக்கள்

தர்மசாஸ்தா குருகுல முதல்வர் வேதாகம ஞான பாஸ்கரன் சிவஸ்ரீ. தானுநாத மஹாதேவ குருக்கள்

மிகவும் ஆச்சரியமான முறையில், வேத சிவாகம பணி செய்பவர். கடந்த பல தசாப்தங்களாக இலங்கையில் நிலவிய உள்நாட்டுப்போர், இடப்பெயர்வு என்பவற்றுக்கு இடையிலும் குருகுலமரபு வழியில் வேதாகமக்கல்வி இன்றைக்கும் ஓரளவேனும் செழிப்புற்று உள்ளது என்றால், இன்றைக்கு இலங்கையின் பல பாகத்திலும் சிவாச்சார்யர்கள், அந்தணோத்தமர்கள் சிறப்பாக கிரியைகளை ஆற்றி வருகிறார்கள் என்றால், வேத, சிவாகம ஆராய்ச்சிகளும், இத்துறையில் புதிது புதிதாக நூல்களும் உருவாகின்றது என்றால், இந்த எழுச்சியில், இணுவில் தர்மசாஸ்தா குருகுல முதல்வர் பிரம்மஸ்ரீ தா.மஹாதேவக்குருக்களின் பங்கும் பணியும் மிக முக்கியமானது.

தமிழகத்தில் இன்றைக்கும் காஞ்சி, திருப்பரங்குன்றம், பிள்ளையார்பட்டி, தருமபுரம் ஆதீனம், சீர்காழி போன்ற பல்வேறு இடங்களில் சிவாச்சார்ய வேதாகம பாடசாலைகள் உள்ளன. இதே போல, இலங்கைத் திருநாட்டிலும் மஹாதேவக்குருக்கள் அவர்கள் ஒரு பாடசாலையை நிறுவனரீதியாக அன்றி, தனது தனிப்பட்ட ஆளுமைத்திறத்தாலும் தம் குடும்பத்தவரின் ஒற்றுமையான பணிகளாலும், முழுமையான இலவசக்கல்வி முறையாக நடத்தி வந்திருக்கிறார் என்பது ஆச்சரியமான ஒரு விடயம் ஆகும்.

1994 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பெரும்பகுதி யாழ்ப்பாண மக்கள் இடப்பெயர்வையும் பெரும் அவலத்தையும் சந்தித்தனர். இவ்வாறான ஒரு சூழலில் மஹாதேவக்குருக்கள் குடும்பமும் அவரது பாடசாலைச் சமூகமும் கூட, இதே துயரத்தை ஏற்று தென்மராட்சியின் உசன் பகுதிக்கு இடம்பெயர்ந்தது. அங்கும் கூட, குண்டு மழைக்குள்ளும் இலவச வேத, ஆகம வகுப்புகளும், பகவத்கீதா வகுப்புகளும் நடந்தமை வியப்பானது. வாத்தியார் அவர்கள் சுமார் 45 வருடங்களுக்கு மேலாக குருகுலத்தை நடத்திவருகின்றமை தனிச்சிறப்பு. வாத்தியார் அவர்கள் ‘வேதசிவாகம பாஸ்கர’ எனும் சிறப்புப் பட்டத்தை முதலாவதாகப் பெற்று, பல அமைப்புகள் ஆலயங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற, ஆயிரம் பிறைச்சந்திரனை தரிசனம் செய்த பெருந்தகை.

### மஹாராஜஸ்ரீ நகுலேஸ்வர குருக்கள்

பஞ்ச ஈஸ்வரங்களில் யாழ்ப்பாணத்திலுள்ள நகுலேஸ்வரமும் ஒன்று. சுசங்கீதன், நளன், அருச்சுனன் போன்றவர்களும் நகுலமுனிவரும் பூசித்த இந்தத் தலம் ஒருகாலத்தில் மலை வடிவில் இருந்ததாம்.

இன்று மலை கடற்கோளில் அழிந்து விட்டாலும் கீரிமலை என்றே அழைக்கப்படும் இத்தல தீர்த்தம் சாகர சங்கமம் ஆக, கண்டகி தீர்த்தமாக விளங்குகிறது.

இந்தத் தலத்தின் அறங்காவலர்களாயும் அர்ச்சகர்களாயும் திகழும் சிவ வேதியர் மரபில் வந்தவர் கு.நகுலேஸ்வரக்குருக்கள்.

1947 இல் தமது தந்தையார் குமாரசாமிக்குருக்கள் காலமானதைத் தொடர்ந்து (அப்பொழுது 22 வயது) கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக நகுலேஸ்வரப் பேராலய ஆதீன கர்த்தராக விளங்கி வருபவர் இவர். தமது மேற்பார்வையில் 1953, 1973, 2012 ஆகிய மகாகும்பாபிஷேகங்களை நகுல நாதருக்குச் செய்தவர்.

1990 இல் ஏற்பட்ட போர் அவலத்தால் ஊரை விட்டு, கோயிலை விட்டு ஊர்மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து ஏழாண்டுகளாகக் கோயில் சூழலை நெருங்க இயலாத சூழல் ஏற்பட்ட போதும், அத்தனை அழிவுகளையும், இழப்புகளையும் தாண்டி கோயிலை மீள கட்டியெழுப்பிய சிவப்பணியாளர் இவர்.

தம் மரபிலிருந்து விலகாத சீர்மையாலும், சிவபக்தியாலும், சிவாச்சாரிய லக்ஷணத்தாலும் ஒரு பெரும் சிவாச்சார்ய திலகமாக குருக்கள் திகழ்கிறார்.

இவை போல் பல்வேறு சிறப்புக்களைத் தங்களகத்தே கொண்டிருக்கும் எமது சிவாசாரியார்களுக்கு கௌரவம் செய்யும் இந்தியா தருமபுரம் ஆதீனம், 27 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கும் சைவத்தமிழ் மக்கள் சார்பில் எமது நன்றிகளுடன் பணிகின்றோம்.

**தொகுப்பு.**
**கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க.வைத்தீஸ்வர குருக்கள்.**
**தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.**

## இனப் படுகொலையும்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதபலத்தின் மூலம் சுதந்திரமானதோ அன்றில் சுயாட்சியான தமிழ் ஈழம் நிறுவ மேற்கொண்ட முனைப்புக்கள், நிறுவினாலும் அதனை ஸ்ரீலங்கா சர்வதேசத்தின் உதவியுடன் எடுத்தாள, கூட்டாள இராணுவ, அரசியல் நடவடிக்கைகளால் நிராதரவாக்கியுள்ளது. அதிலிருந்து ஸ்ரீலங்கா கொஞ்சமாவது இளகி, ஒரு நியாயமான தீர்வைத் தரும் என எதிர்பார்ப்பதற்கில்லை. மாறாக பரம்பரை காலமாக தமிழ் மக்களுக்கு இருந்த கட்டமைப்புகளை ஆக்கிரமிக்கும் முனைப்புக்களிலேயே அது முன்னேறுகிறது.

இதனை எதிர்த்து நிற்கக் கூடிய ஆயுதக் கட்டமைப்புகள் தமிழ்மக்களிடையே இல்லை. புலம்பெயரிலிருந்து நடந்தவற்றை இரை மீட்கும் செயற்பாடுகள், நினைவுகளைத் தருமே ஒழிய, நிஜமாகா. அதிலிருந்து முன்னேறுவதற்காக, தமிழ்மக்களின் எல்லா அரசியல் தரப்புக்களுமே 2009 இன் போரின் முடிவுக்குப் பின்னால், தாங்கள் வன்முறையைக் கைவிடுகிறார்கள் என வெளிப்படுத்தி, தனிநாட்டுக்கான கோரிக்கையை அழுத்தம் கொடுக்காமல் ஒரு நாடு என்ற கடப்பாட்டில் அதனுள் தீர்வு பொதியைக் கோரினார்.

12 வருடங்களுக்கு மேலாகியும், சிங்கள பௌத்த பேரினவாதம் ஒரு நாடு, ஒரு நிலக் கட்டமைப்பு அதற்கான சிங்கள, பௌத்தர்களின் அதிகாரம் என்றவாறே குடியரசு சட்டம் இயற்ற ஆயத்தங்கள் மேற்கொள்கிறது. அந்த குடியரசு திட்ட வரைவின் ஆலோசனைக்கு ஒவ்வொரு தமிழ்ப் பரப்பும் சமஷ்டி, சுயாட்சி, கூட்டாட்சி என்று சமர்ப்பணங்கள் வைத்தனர். சர்வதேசம் எதனை இந்த மக்கள் நாடுகிறார்கள் என குழம்புகிறார்கள்.

# விசேட தேவையுடையோருக்கான சிறந்த பாடசாலையாக ‘சிவபூமி’!

## கௌரவிக்கும் நிகழ்வுகள் பாடசாலையில் இடம்பெற்றன





(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,நவ.30

தேசிய மட்டத்தில் விசேட தேவையுடையோருக்கான சிறந்த பாடசாலைகளில் முதலாம் இடத்தினைப் பெற்ற கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலையை கௌரவிக்கும் விசேட நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது.

தேசிய மட்டத்தில் விசேட தேவையுடையோருக்கான பாடசாலைகளில் முதலாம் இடத்தை நிலைநாட்டி கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை விருதைக் கடந்த வியாழக்கிழமை பெற்றிருந்தது.

இந்த நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி திரு.ஆறுதிருமுருகன்,சிவபூமி பாடசாலை அதிபர் கலைவாணி குகதாஸன், ரிஷி தொண்டுநாத சுவாமிகள், நல்லூர் பிரதேச செயலர், பிரதேச செயலக கலாசார உத்தியோகஸ்தர்களின் மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கையின் இருபெரும் ஆன்மீக முதுசங்கள் நல்லைநகர் நாவலரும் மட்டு. விபுலானந்தருமே!

## குருபூஜையில் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜெகதீசன் கருத்து



சைவத்தையும், தமிழையும் கண்ணெனக்காத்து அறநெறியில் வாழ்வாங்குவாழ்ந்துகாட்டிய நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 142 ஆவது குருபூஜை நிகழ்வு, இம்முறை நாடளாவிய ரீதியில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கடந்த சனிக்கிழமை நாடளாவிய ரீதியிலே அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

விசேடமாக கொழும்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பிரதானமாக முன்னெடுக்கப்பட்ட நிகழ்வுகளோடு வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூஜை முன்னெடுக்கப்பட்டது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப்



பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் இந்த ஏற்பாடுகளை கச்சிதமாகச் செய்திருந்தார்.

அம்பாறை மாவட்டத்துக்கான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் 142 ஆவது குருபூஜை



தினவிழா கடந்த சனிக்கிழமை காலை காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் நல்லைநகர் நாவலர் பெருமானும் முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரும் இலங்கைத் திருநாட்டின் இருபெரும் ஆன்மீக முதுசங்கள். இருவரது பணிகளையும் இளம்சந்ததியினருக்கு எடுத்துச்சொல்லவேண்டிய கடமை எமக்குள்ளது எனத் தெரிவித்தார்.

காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக் கள் திருமுன்னிலை வகிக்க, காரைதீவுப் பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கேற்றல், நந்திக்கொடியேற்றல், அறநெறிக் கீதம், குருபூஜை என்பன நடைபெற்றன.

இந்த நிகழ்விலே, ஆன்மிக அதிதிகளாக காரைதீவு ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சி.தியாகராஜக் குருக்கள், காரைதீவு ஸ்ரீ நந்தவனச் சித்திவிநாயகர் ஆலய குருக்கள் சிவஸ்ரீ இ.மகேஸ்வரக் குருக்கள், காரைதீவு ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சி.சாந்தரூபன் குருக்கள், பெரிய நீலாவணை ஸ்ரீ மகா விஷ்ணு ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ ந.பத்மலோஜன் சர்மா, காரைதீவு ஸ்ரீ மாவடிக் கந்தசுவாமி ஆலய சிவாச்சாரியார் சிவஸ்ரீ ச.கோவர்த்தனன் சர்மா, நாவிதன் வெளி ஸ்ரீ முருகன் ஆலய சிவாச்சாரியார் சிவஸ்ரீ சுபாஸ்கர் சர்மா ஆகியோர் கலந்துகொண்டு ஆசீர்வ தித்தனர்.

மணிமண்டபத்தில், அரங்கநிகழ்வில் நாவலர் பெருமான் மற்றும் விபுலானந்த அடிகளாருக்கு மாலை அணிவித்து, சமயகுருமாரால் வேதபாராயணமும், தீபாராதனையும் நடத்தப்பட்டன. அறநெறி மாணவர்களின் நாவலரின் பன்முகதரிசனம் மற்றும் உரைகள் இடம்பெற்ற அதேவேளை, விபுலானந்த பணிமன்றம் சார்பில் அதன் முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா சிறப்புரையாற்றினார்.

அங்கு மேலதிகஅரசஅதிபர் ஜெகதீசன் மேலும் உரையாற்றுகையில் –

எப்போதும் சிவசின்னங்களை அணியும் ஜந்தாம் பெரும் குரவர் அவர். சைவத்துக்கும் தமிழுக்குமாக வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர். பைபிளை மொழிபெயர்க்கின்ற ஆங்கிலப்புலமைஅவருக்கிருந்தது. ஆறுமுகநாவலர் பெருமான் விபுலானந்த அடிகள் அவர் களது ஆத்மாக்கள் எங்களை வழிநடத்து கின்றன என்ற நம்பிக்கை இருக்கிறது.

நாம் சமயகுரவர்களை வணங்குகின்றோம். அவர்கள் வாழ்ந்த முறைகளைப் படித்திருக்கின்றோம். அதேபோன்று இவர்கள் வாழ்ந்துகாட்டியுள்ளனர். விபுலானந்தரும் நாவலரும் 19 ஆம் நூற்றாண்டில் அவதரித்து பலசேவைகளை சமூகத்துக்காக ஆற்றியவர்கள். அதற்காகவே இலங்கையின் தேசியவீரர்கள் என்ற அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. தபால்தலையும் வெளியிடப்பட்டிருக்கிறது. அன்றைய மேலைத்தேய அடக்குமுறை கால கட்டத்தில் பல சவால்களுக்கு மத்தியில் பெரும்பணி கள் செய்த பெருமகான்களை நாம் மறக்கமுடியாது.

ஆன்மீக அரசியல் தலைவர்களைத் தேர்ந்தெடுப்



பதில் நாவலர்பெருமானது வழிகாட்டல் இருந்தது. சேர்.பொன்.இராமநாதனை தெரிவுசெய்ததில் அவரது பங்களிப்பு நிறையவே இருந்தது. திறந்த கூட்டத்தில் ஆராய்ந்து சொற்போர் நடத்தி தீர்க்கமாக முடிவெடுப்பது அவரது தனி இயல்பு.

இன்று வருவாயுள்ள பல ஆலயங்களின் நிர்வாகங்கள் நீதிமன்றில் உள்ளன. ஆனால் அன்று ஆலய நிர்வாகங்களை வழிநடத்துவதில் ஆன்மீகத் தலை வர்கள் முன்னின்ற சந்தர்ப்பங்கள்இருந்தன. நாவலர் பெருமானும் அதில் தலையாய ஒருவர்.

தமிழகத்தில் பெருமானது பேச்சுத்திறமை கதாப் பிரஷங்கத்தை கேட்டுவியந்து அவரை பல்லக்கில் ஏற்றி திருவாவடுதுறை ஆதீனம் 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கியமை இலங்கைவாழ் மக்களுக்கு பெருமையானது.

இந்து கலாசார திணைக்களம் அம்பாறை மாவட்டத்தில் சிறந்த ஆன்மீக கலைகலாசார விழுமியங்களின் பயிற்சிநிலையமாக இந்த விபுலானந்த மணிமண்டபத்தை அங்கீகரித்திருக்கிறது. இவ்வாறு தொடர்ச்சியாக சமய ஆன்மீக நிகழ்வுகள் நடந்தேறி வருகின்றமை மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்குமுரியது. அதற்காக பணிப்பாளர் உமாமகேஸ்வரன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஜெயராஜி பிரதாப் போன்றோரைப் பாராட்டலாம்.

சைவத் தமிழர்களுக்கென்று ஒரு மதிப்புமிகு அடையாளம் தந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான். பல்துறை ஆளுமை மிக்க தீர்க்கதரிசனப் பார்வை கொண்ட பெருமகனார் நமக்காகச் செய்த அரும்பணி சைவத் தமிழுலகம் என்ன கைம்மாறு செய்தாலும் ஈடாகாது. – என்றார்.

ஆன்மிக அதிதிகள், விசேட அதிதிகள் எனப் பலரும் கலந்துகொள்ளும் இந்த நிகழ்விலே மாணவர்களின் ஆளுமைத்திறன் வெளிக்கொணர்வு நிகழ்வுகளும் அவர்களுக்கான பாராட்டு நிகழ்வும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வரவேற்புரையை அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜி நிகழ்த்த, நன்றியுரையை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஸ்ரீபிரியா கங்கைநாயகன் நிகழ்த்தினார். கலாசார உத்தியோகத்தர் பிரதாப் நிகழ்வை நெறிப்படுத்தி தொகுத்தளித்தார்.

(காரைதீவு குறூப் நிருபர்
வி.ரி.சகாதேவராஜா)



# பிரித்தானியாவில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன மாவீரர் நாள் நிகழ்வுகள்





மாவீரர் நாள் நிகழ்வுகள் பிரித்தானியா வில் மிகவும் உணர்வு பூர்வமாக இடம்பெற் றன.

புலம்பெயர் தமிழ் மக்களின் ஏற்பாட்டில் லண்டனில் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு மாவீரர்களின் புகைப் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டு மிகவும் உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.

இதில் மாவீரர்களின் குடும்ப உறுவுகள், உறவினர்கள், நாடு கடந்த தமிழ் இன செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு மலர்தூவியும், தீபம் ஏற்றியும் அஞ்சலி செலுத்தினர். (100)

## பாசி வளர்ப்புக்கான காசோலையை பயனாளிகளுக்கு வழங்கினார் டக்ளஸ்



யாழ்ப்பாணம், நவ. 30

மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் நோக் கில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வாழ்வாதாரத் திட்டங்களின் அடிப்படையில் நக்டா எனப்படும் தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக பாசி வளர்ப்புக்காக வேலணை மற் றும் ஊர்காவற்துறை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கான காசோலைகளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற் றுறை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

சமுர்த்தி பயனாளர் குடும்பங்களில் இரண்டு லட்சம் குடும்பங்களை வலுப்படுத்தும் குறித்த திட்டத்துக்கு அமைய யாழ்ப்பாண மாவட்டத்தில் கடலட்டை வளர்ப் பிற்காக சுமார் 100 பயனாளர்களும் பாசி வளர்ப்பிற் காக 100 பயனாளர்களும் கொடுவா மீன் வளர்ப்பிற் காக 100 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில், ஊர்காவற்துறை பிரதேசத்தில் 25 பயனாளர்களும் வேலணையைச் சேர்ந்த 10 பய னாளர்களும் தெரிவு செய்யப்பட்ட நிலையில், முதற் கட்டமாக ஒரு பகுதியினருக்கு காசோலைகள் வழங் கப்பட்டுள்ளன.

இதன்போது கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச் சர் –

கடற் பாசிகளுக்கு சர்வதேச சந்தையில் நல்ல வரவேற்பு காணப்படுவதால், பகுதி நேரமாக கடல்பாசி செய்கையில் ஈடுபடுவதன் மூலம் சராசரியாக வருடத் துக்கு 4 லட்சம் ரூபா வருமானமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

அதனடிப்படையில் கடலட்டை வளர்ப்பிற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தலா சுமார் 5 லட்சம் ரூபா வரையிலும், கொடுவா மீன் மற்றும் பாசி வளர்ப்பிற்காக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு முறையே 2 லட்சத்து 50 ஆயிரம் ஒரு லட்சம் ரூபா வீதம் வழங்கப்படவுள் ளன.

மேலும், கடல் பாசி செய்கையில் முதலீடு செய்வதற்கு தனியார் முதலீட்டாளர்களும் ஆர்வம் செலுத்துவது டன் வேலணை மற்றும் ஊர்காவற்துறை பிரதேசத் தில் பொருத்தமான இடங்களும் பெருமளவில் அடையா ளப்படுத்தப்பட்டுள்ளமையால், பாசி வளர்ப்பில் ஈடுபடு வதற்கு மக்கள் ஆர்வம் செலுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

## அரச ஈட்டு, முதலீட்டு வங்கியிடமிருந்து கொவிட் அறக்கட்டளைக்கு 50 லட்சம் ரூபா

அரச ஈட்டு, முதலீட்டு வங்கியால், செய்கடமை– கொவிட் -19 சுகாதார மற்றும் சமூகப்பாதுகாப்பு அறக் கட்டளைக்கு, 50 லட்சம் ரூபா நிதியுதவி அளிக்கப்பட்டது.

இதற்கான காசோலை, அரசஈட்டு, முதலீட்டு வங்கி யின் பதில் பொது முகாமையாளரும் பிரதம நிறை வேற்று அதிகாரியுமான லுஷாந்த ரணசிங்கவால், ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளர் சுகீஸ்வர பண்டார விடம் கையளிக்கப்பட்டது.

அரச ஈட்டு, முதலீட்டு வங்கியின் அதிகாரிகள் சில ரும் இதன்போது கலந்து கொண்டனர்.

## மதம் மாறாவிட்டால் ஆண்டவரின் சாபம் கிடைக்கும் மிரட்டி மதமாற்ற முயன்ற குற்றச்சாட்டில் மூவர் கைது

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராம அலு வலர் பிரிவில் அமைந்துள்ள கிழவன்குளம் கிராமத் தில் மதம் மாற்றச்சென்ற கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த ஒரு குழுவினர் தன்னைப் பேசி, அச்சுறுத்தல் விடுத்த னர் என மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து மாங்குளம் பொலிஸாரால் வாக னத்துடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராம அலுவ லர் பிரிவில் அமைந்துள்ள கிழவன்குளம் பகுதியில் வசிக்கும் நபர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று மதம் மாறா விட்டால் ஆண்டவரின் சாபம் கிடைக்கும் என மிரட்டி மதம் மாற்ற முயன்ற குற்றச்சாட்டில் 3 பேர் மாங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிழவன்குளம் பகுதிக்கு ஹயஸ் ரக வான் மற்றும் மோட்டர் சைக்கிள் என்பவற்றில் சென்ற ஒரு குழுவி னர் அங்குள்ள வீடு ஒன்றின் முன்னால் நின்று அந்த வீட்டு குடும்பஸ்தரை அழைத்து தமது மதத்துக்கு மாறுமாறு கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது அவர் அதற்கு மறுப்பு தெரிவித்த நிலை யில், குடும்பஸ்தரை அங்கு சென்ற சபையைச் சேர்ந்த வர்கள் தரக்குறைவாகப் பேசியமையுடன், கடவுளின் பெயரால் சாபமிட்டு அச்சுறுத்தல் விடுத்துச் சென்றுள்ள னர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட நபர் கிராம அலுவல ருக்குத் தகவல் வழங்கி மாங்குளம் பொலிஸார் மற்றும் 119 பொலிஸார் ஆகியோருக்கு செய்த முறைப்பாட்டை யடுத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கு வருகை தந்த ஹயஸ் ரக வாகனத்தையும், அதனுள் வந்த மூவரையும் கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்துள்ள மாங்குளம் பொலிஸார் அவர்களை நீதிமன் றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை கிழவன்குளம் பகுதியில் சட்டவிரோத மாக ஒரு சபைக்கூடம் அமைக்கப்பட்டு மதமாற்ற செயற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்ற நிலை யில் இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்கள் விடுதலை கழக செயலாளர் தோழர் ஆனந்தி நினைவு நிகழ்வு யாழில்





(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,நவ.30

காந்தீயம் அமைப்பின் செயற்பாட்டாளரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் பொதுச்செயலாளரு மான அமரர் சுப்பிரமணியம் சதானந்தம் (தோழர் ஆனந்தி அண்ணர்) நினைவஞ்சலி நிகழ்வும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் ராஜா சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது. முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீ பனின் தலைமையில் மௌன அஞ்சலியுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் திருமதி சதானந்தன் நினைவுச் சுடரினை ஏற்றி வைத்தமையுடன் நாடாளும ன்ற உறுப் பினர் சித்தார்த்தன், தோழர் ஆனந்தி அண் ணரின் திருவுருவ படத்திற்கு மலர்மாலை அணிவித் தார்.

தொடர்ந்து அக்கட்சியின் மத்திய குழு உறுப்பி னர் தோழர் குரு, வடமாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், தமிழ் தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம், தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி தலைவர் சுகு .சிறீதரன், ஈ.பி.ஆர். எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன்,இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் ஆகியோர் நினைவு உரையை நிகழ்த்தினர்.

கட்சியின் உறுப்பினர்கள், தோழர் ஆனந்தி அண்ணரின் உறவினர்கள் கலந்து கொண்டிருந் தனர்.

## உணவுப் பண்டங்களின் விலைகளும் எகிறின

கோதுமை மாவின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட பல காரணங்களால் பாண் உள்ளிட்ட பேக்கரி பொருள்களின் விலைகளை அதிகரிக்க பேக்கரி உரிமை யாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

விலை அதிகரிப்பு தொடர்பில் நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) காலை அறிக்கையொன்றை வெளியிட்டதாக அகில இலங்கை பேக்கரி உரிமை யாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி, இன்று முதல் பேக்கரி பொருள்களின் விலைகளை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கோதுமை மாவின் விலை அதி கரிப்புக்கு மேலதிகமாக, நாடளாவிய ரீதியில் பல பகுதி களில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மையும் குறிப்பிடத்தக்கது .

காலைக்கதிர் Kalaikkathir







# ஒற்றுமை முயற்சிக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## மாவையின் கருத்தை ஏற்று சித்தார்த்தன் அறைகூவல்

**தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகளின் ஒற்றுமை முயற்சிக்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.**

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் தலைமைகளின் ஒற்றுமை முயற்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தலைமை தாங்க வேண்டும் எனத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா வேண்டுகோள் விடுத்துள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சித்தார்த்தன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் தொடர்ச்சியாக அரசியல் தலைமைகளின் ஒற்றுமைக்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். தனிப்பட்ட ரீதியாகவும் மற்றவர்களுடன் பேசி பல முயற்சிகளை எடுத்து வருகின்றோம். இது ஒரு தனி மனிதன் செய்யக்கூடிய விடயமல்ல. அன்று இருந்த அரசியலுக்கும் இன்றுள்ள அரசியலுக்கும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

ஆனால், எல்லோருமாக ஒற்றிணைந்து ஒற்றுமை முயற்சியை முன்னெடுத்து எல்லாக் கட்சிகளின் மத்தியிலும் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்தி முதலில் ஆகக் குறைந்தது தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அனைத்துக் கட்சிகளும் நாங்கள் ஒற்றுமைப்பட்டு ஒன்றுபடுவோமாக இருந்தால் அடுத்தகட்டமாக ஒரு பலமான தேசிய அரசியல் அமைப்பாக வந்து தமிழ் மக்களுடைய பிரச் சினைகளை முன்னெடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

ஆகவே, மாவை, சுரேஷ், செல்வம் போன்ற அனைவரும் இணைந்து இந்த முயற்சியை எடுக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கை - என்றார்.

# தடை செய்யப்பட்ட நாடுகளில் இருந்து இரு வாரங்களாக எவரும் வரவில்லை

## சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

புதிதாகக் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் கொரோனா மாறுபாட்டின் அச்சுறுத்தல் காரணமாக, நாட்டுக்குள் பிரவேசிக்க தடைவிதிக்கப்பட்ட ஆறு தென்னாபிரிக்க நாடுகளின் சுற்றுலாப் பயணிகள், கடந்த 14 நாள்களாக நாட்டுக்கு வரவில்லை என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தென்னாபிரிக்கா, நமீபியா, போட்ஸ்வானா, சிம்பாப்வே, லெசோதோ மற்றும் சுவாசிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகள், கடந்த 14 நாள்களாக நாட்டுக்கு வரவில்லை என்றும், ஒமிக் ரோன் மாறுபாடு காரணமாக, நேற்று நள்ளிரவு முதல் நாட்டுக்குள் நுழைய அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 14 நாள்களில் இந்த நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் தவிர வேறு எவரும் நாட்டுக்கு வந்துள்ளார்களா என்பது குறித்து உரிய திணைக்களங்கள் ஆராயும் என்றும், அதற்கேற்ப சுகாதாரத்துறை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

தடை செய்யப்பட்ட 6 நாடுகளைத் தவிர மற்ற நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு எந்தத் தடையும் இல்லை என்றும், விசா வழங்கும்போது மேற்குறிப்பிட்ட பயணிகள் சம்பந்தப்பட்ட நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்களா என்பதை அதிகாரிகள் பரிசோதிப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய வைரஸால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒமிக்ரோன் வைரஸ் முன் அறிகுறிகளற்ற பல பிறழ்வுகளைக் கொண்டுள்ளது. இதனால் ஒட்டுமொத்த உலகளாவிய ஆபத்து மிகவும் அதிகமாக மதிப்பிடப்படுகிறது என்றும் மேற்படி ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

## அரசில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்கிறார்கள். அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. நாங்கள் இன்னும் அரசுடன் இணைந்து செயற்படுகின்றோம் என்றும் அவர் மேலும் கூறினார்.

'அரசின் மீது உங்களுக்கு ஏமாற்றம் இல்லையா?' என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ள அவர்,

இல்லை, இல்லை. அரசு தொடர்பில் எந்த ஏமாற்றமும் இல்லை. அந்தந்த சமயங்களில் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறோம். இது நாங்கள் உருவாக்கிய அரசு; நாங்கள் உருவாக்கிய ஜனாதிபதி. எனவே, அர சிலுள்ள பலவீனங்களைச் சரி செய்து முன்னோக்கிச் செல்ல முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது - என்றார்.

## மகளுடன் சேட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திய சிறுமியின் தந்தை தர்மபுரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வீட்டில் ஆட்கள் இல்லாத நேரம், அயலவர் ஒருவர் தனித் திருந்த 12 வயதான சிறுமியுடன் சேட்டை விட்டுள்ளார் என்றும், அதை அறிந்த தந்தை ஆத்திரத்தில் அயலவர் மீது சரமாரியாக வெட்டித் தாக்குதல் நடத்தியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

தாக்குதலில் அயலவரின் காது அறுக்கப்பட்டுள்ளதுடன், கை மற்றும் கால் போன்ற இடங்களிலும் வெட்டுக் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

காயமடைந்தவர் தர்மபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

சிறுமியின் தந்தை கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், அவரிடம் இருந்து வாள் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## 'ஒமிக்ரோன்'...

(முதலாம்பக்கத்தொடர்ச்சி...)

என்று இலங்கை மருத்துவ சங்கம் நேற்று தெரிவித்துள்ளது.

எனினும், இந்தப் புதிய மாறுபாடு நாட்டுக்குள் நுழையாமல் இருப்பதை உறுதி செய்ய அதிகாரிகள் ஏற்கனவே எடுத்தது போல் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று சங்கத்தின் தலைவர் கலாநிதி பத்மா குணரத்ன தெரிவித்தார்.

எவ்வாறாயினும், மக்கள் சுகாதார விதிகளைக் கண்டிப்பாக கடைப்பிடிப்பதோடு, சரியான நேரத்தில் தடுப்பூசி போடுவது முக்கியம் என்றும் வைத்தியர் குணரத்ன வலியுறுத்தினார்.

இதனிடையே புதிய மாறுபாடு நாட்டுக்குள் நுழைவதற்கான வாய்ப்புகள் பல இருக்கின்றன என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

விமான நிலையங்களில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான செயல்முறைகள் மிகவும் நலிவடைந்துள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாப் பயணிகள் தொடர்பிலும் அதிகாரிகள் சிறப்பு கவனம் செலுத்தி, அனைத்து வழிகளிலும் வைரஸ் பரவல் தடுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

## சித்தர் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரப்பில் இருக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டில் செயலாற்ற வேண்டும். அந்த வரலாற்றுத் தேவையை உணர்ந்து கொண்டுள்ளோம். இதன் முதல்கட்ட கலந்துரையாடல் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சி தலைவர்களுக்கிடையில் நடைபெற்றது. அதற்குப் பெரும் ஆதரவை அனைவரும் தெரிவித்திருந்தனர். இருப்பினும் சித்தார்த் தனே எங்களோடு முனைப்பாக தொடர்ந்தும் செயலாற்றினார். மற்றக் கட்சித் தலைவர்களைச் சந்திப்பதற்கும் கூட்டங்களை ஒருங்கிணைப்பதற்கும் அளப் பரிய பங்களிப்பைச் செய்தவர் சித்தார்த்தன்.

தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான ஒருமித்த நிலைப்பாட்டை எட்டும் வகையிலே கடந்த சில மாதங்களாக சந்திப்புகள் நடைபெற்று வருகின்றன. இதில் காத்திரமான வெற்றியும் கண்டிருக்கின்றோம். தற்போது பல கட்சித் தலைவர்கள் சேர்ந்து முன்னெடுக்கும் நிலைமைக்கு இது வளர்ச்சி கண்டுள்ளது.

இதில் பல கூட்டங்களில் மாவை சேனாதிராஜா கலந்து கொண்டிருந்தாலும் இறுதி நேரங்களில் பின்வாங்கும் போக்கைக் கடைப்பிடித்து இருந்தார். அதற்கான காரணத்தை இப்போதுதான் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். இதனை ஏற்கனவே தெளிவுபடுத்தி இருந்தால் இன்னும் துரிதமான முன்னேற்றத்தை இந்த விடயத்தில் அடைந்திருக்க முடியும்.

இருப்பினும் இந்த விடயங்களைச் சித்தார்த்தனும் இணைந்தே முன்னெடுத்திருந்தார் என்பதை மாவை சேனாதிராஜா நன்கு அறிந்திருந்தார்.

சித்தார்த்தன் தலைமை தாங்கும் ஒருமித்த நிலைப்பாட்டை முன்னெடுப்பில் மாவை சேனாதிராஜா கலந்துகொள்ளவதில் விருப்பத்தைத் தெரிவித்திருப்பது பெரு மகிழ்ச்சி அளிக்கின்றது. அதை நாம் வரவேற்கின்றோம் - என்றார்.

# கிறிஸ்தவத் தேவாலயம் மீது யாழ்ப்பாணத்தில் தாக்குதல்!




யாழ்ப்பாணம் - கோட்டைக்கு அண்மையிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தின் மீது நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை 3.30 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்துக்கு அண்மையிலுள்ள குறித்த தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து, அந்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணை நடத்தியதோடு தாக்குதலை நடத்திய கொட்டடி பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளார்கள்.

கைது செய்யப்பட்டவர் மது போதையில் இருந்தார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த தாக்குதலின் பிண்ணனி தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.கோட்டை தேவாலயம் மீதான தாக்குதல் வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒன்று அல்ல!

## நாவாந்துறை பங்குத்தந்தை கூறுகிறார்



யாழ். கோட்டை தேவாலயம் மீதான தாக்குதல் வேண்டுமென்று செய்யப்பட்ட விடயமல்ல. ஒரு மனநோயாளியால் மேற்கொள்ளப்பட்டதே என நாவாந்துறை பங்குத்தந்தை அருட்தந்தை யேசுரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் கோட்டைக்கு அருகிலுள்ள கிறிஸ்தவ தேவாலய சொரூபங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

புனித அந்தோணியார் சிற்றாலயம் மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவரால் சொரூபங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

மேற்படி செயலை செய்தவர் ஏற்கனவே எமக்கு அறிமுகமானவர். அவர் ஒரு மனநோயாளி. நீண்ட காலமாக இந்த ஆலயத்திலேயே தங்கியுள்ளார். நாங்கள் நீண்டமுறை அவரை வெளியேற்றப் பார்த் தோம். ஆனால் அவர் போகவில்லை.இது வேண்டுமென்று செய்யப்பட்ட ஒரு விடயம் அல்ல ஒரு மனநோயாளியால் மேற்கொள்ளப்பட்ட விடயமாகும்.

அவரை பொலிஸார் நேரடியாக கைது செய்துள்ளார்கள். பின்னர் எனக்கு அறிவித்திருந்தார்கள். நான் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு பதிவு செய்துள்ளேன். அதனுடைய தொடர்ச்சியான நடவடிக்கையை பொலிஸார் எடுப்பார்கள்.

எனவே இது தொடர்பில் பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை. கிறிஸ்தவ தேவாலயம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என யாரும் குழப்பமடைய தேவையில்லை. இது ஒரு மன நோயாளியால் மேற்கொள்ளப்பட்ட செயல் என்பதையும் வேண்டுமென்று செய்யப்பட்ட விடயமல்ல என்பதையும் நான் மக்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். - என்றார்.

# அரசில் இருந்து வெளியேறும் எண்ணம் இதுவரை இல்லை

## சுதந்திரக் கட்சி திட்டவட்டம்



அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் எண்ணம் இதுவரை இல்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் பல்வேறு விடயங்களை கூறினாலும் ஒரு கட்சியாக நாங்கள் அத்தகைய முடிவை எடுக்கவில்லை என தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

தாம் உருவாக்கிய அரசாங்கம் என்பதோடு ஜனாதிபதியையும் தாமே தேர்ந்தெடுத்துள்ள நிலையில் இந்த அரசாங்கத்துடன் தொடர்ந்து பணியாற்றுவோம் என தயாசிறி ஜயசேகர கூறினார்.

அரசாங்கத்தின் அனைத்து தீர்மானங்களுடனும் எங்களால் உடன்பட முடியாமல் போனாலும் பங்காளிக் கட்சி என்ற வகையில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டவர்களுடன் பேசியுள்ளேன் என அவர் குறிப்பிட்டார். எந்தவொரு சவால்களையும் எதிர்கொண்டு, நாட்டையும் அரசாங்கத்தையும் முன்னோக்கி கொண்டு செல்ல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆத ரவை வழங்கும் என்றும் தயாசிறி ஜயசேகர தெரி வித்தார்.

# முப்படையினரும் அம்பாறையில் ரோந்து

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், முப்படை மற்றும் பொலிஸார் இணைந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் பரிசோதனை செயற்பாட்டையும் முன்னெடுத்துள்ளனர்.

இலங்கையின் அனைத்து நிர்வாக மாவட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடற்பரப்புகளில் பாதுகாப்பைப் பேணுவதற்காக நாட்டின் அனைத்து ஆயுதம் தாங்கிய முப்படையினருக்கும் அழைப்பு விடுக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த திங்கட்கிழமை வெளியிட்டிருந்தார்.

இதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, சவளக்கடை, மத்திய முகாம் பொலிஸ் நிலையங்கள், பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை மற்றும் கல்முனை இராணுவ முகாம் உள்ளிட்ட இடங்களில் பணியாற்றும் பாதுகாப்புத் தரப்பினர் இந்தச் செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நாட்டில் வெகுவாக அதிகரித்துவரும் கொரோனா அலையைக் கட்டுப்படுத்த இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் ஒரு கட்டமாக திடீர் சோதனைகளை முப்படையினர் உள்ளிட்ட பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இந்தத் திடீர் சோதனையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துதல், தலைக்கவசம் அணியாது செல்லுதல், ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணித்தல், அதிவேகமாக செல்வது, குடிபோதையில் வாகனம் ஓட்டுவது என்பன தொடர்பில் கண்காணிக்கப்பட்டு தண்டப்பணம் விதிக்கப்பட்டு, வீதி ஒழுங்குமுறை தொடர்பான ஆலோசனைகள், முகக்கவசம் அணியாது சென்றவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு, எச்சரிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# முதலாவது சூரிய சக்தி மின் உற்பத்தி கூரை ஓடு யாழ்ப்பாணத்தில் தயாரிப்பு

இலங்கையிலேயே முதற் தடவையாக, சூரிய சக்தி மின் உற்பத்தி கூரை ஓடு தயாரிக்கும், யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு இயங்கும், இகோஸ்டீம் நிறுவனத்தின் சூரிய சக்தி மின் உற்பத்தி கூரை ஓடு உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலைக்கு சூரிய, காற்று, நீர் மின் மற்றும் திட்ட அமுலாக்க இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஹேமந்த சமரகோன், இலங்கை மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலு அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் சேபால மற்றும் அதிகாரிகள் கடந்த சனிக்கிழமை கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்கள். அவர்கள் அங்கு, 'இகோஸ்டீம்' சூரிய சக்தி மின் உற்பத்தி கூரை ஓடு உற்பத்தி பற்றிய விடயங்கள் தொடர்பாகக் கேட்டு அறிந்து கொண்டமையுடன், உற்பத்தியை மேலும் விரிவாக்கம் செய்வதற்கு ஆலோசனைகளையும் வழங்கி, தம்மால் எதிர்காலத்தில் வழங்கப்படக்கூடிய ஆதரவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடினர்



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.11.2021 இல் வெளியிடப்பெற்றது.